# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2074/37 - 2018 ජූනි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා 2018.06.07

*2074/37 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது இலக்கம்:* MCUDP/LA/ABT(W-05)/14/03.
*காணி மற்றும் பாராளுமன்ற மனுசீரமைப்பு அமைச்சின் குறிப்பு இல:* 4-3/10/2016/LRB/172.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணித் துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

(கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மாதிவளை கிழக்கு திசையைத் திருப்பும் கருத்திட்டம் காரணமாக மழை காலங்களில் தலங்கமை வாவி, எவரிஹேன வாவி மற்றும் இவற்றைச் சூழவுள்ள பிரதேசங்களில் ஒன்றுசேர்கின்ற மழைநீரை களனி கங்கைக்கு கொண்டு செல்லும் வாய்க்கால் வரப்புகளை பலமுள்ளதாக அமைத்துப் பேணிப் பாதுகாக்கும் வகையில் தேவையான காணித்துண்டுகளை அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 502- உடுமுல்ல வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.05.10 ஆந் திகதிய கொ: 9763 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 1, 2 எனக் காட்டப்பட்ட 0.0663 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட இரண்டு (02) காணித்துண்டுகள்:

**துண்டு இல.: 01**

காணியின் பெயர்: எலமுல்லவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: பாலசூரிய அப்புஹாமிலாகே பத்மினி பெரேரா, இல. 5, அம்பத்தலே, அங்கொடை; விஸ்தீரணம்: 0.0316 ஹெக்டயார்.

**துண்டு இல.: 02**

காணியின் பெயர்: எலமுல்லவத்த மற்றும் போகஹவத்த; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: பத்தினியகே தொன் கருணாரத்ன, இல. 52, அம்பத்தலே, முல்லேரியாவ; விஸ்தீரணம்: 0.0347 ஹெக்டயார்.

1A - G 27826 - 27 (2018/06 )

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணித்துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் வருடம் யூலை மாதம் 05 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு, இராஜகிரிய, வெலிக்கடை, ஶ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனத்தின் கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என் முன் தோன்றும்படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டுகளை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சீ.டபிள்யூ. அபேசூரிய,
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டம்,
கெலொன்னாவை பிரதேச செயலாளர் பிரிவு.

கொழும்பு மாநகர் சார்ந்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின்,
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி மீட்புக்கும் அபிவிருத்திக்குமான கூட்டுத்தாபனம்,
இல. 3, ஶ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.
2018, யூன் 06.

06 - 866

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.